INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**
திகதி: 12 August 2024
நேரம்: 11:00 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**
செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல்: info ‘at’ ihp.lk
**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**
மருத்துவர் ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at’ ihp.lk Twitter: @ravirannaneliya

# நாட்டின் போக்கு தவறான திசையில் பயணிப்பதாக பெரும்பான்மையான இலங்கையர்கள் தொடர்ந்து நம்புகின்றனர்

*முந்தைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் நாட்டின் போக்கு தவறான திசையில் செல்கிறது என்ற பொதுமக்களின் கருத்தில் சிறிதளவு சரிவு ஏற்பட்டிருக்கிறது.*

ஜூலை 2024 க்கான சமீபத்திய SLOTS கருத்துக்கணிப்பின் படி 72% இலங்கையர்கள் நாடு தவறான திசையில் செல்வதாகக் கூறுவதைக் காட்டுகிறது, அதே நேரத்தில் 8% மட்டுமே அது சரியான பாதையில் செல்வதாக நம்புகிறார்கள். உறுதியளிக்காத பதிலளிப்பவர்களின் எண்ணிக்கையில் தொடரும் வீழ்ச்சியின் காரணமாக ஜூலை 2023 முதல் நாட்டின் போக்கு செல்லும் திசை பற்றிய பொது மக்களின் கண்ணோட்டம் மோசமடைந்துள்ளது. நாடு சரியான திசையில் பயணிக்கிறது என்று நினைப்பவர்களின் எண்ணிக்கை 5% க்கும் குறைவாகவே இருந்தது. இருப்பினும், 8% நாட்டின் போக்கு சரியான பாதையில் இருப்பதாக இப்போது நினைப்பதால், ஜூலை மதிப்பீடுகள் கொஞ்சம் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன.

**நாட்டின் திசை (%)**

நீங்கள் நாட்டின் விஷயங்கள் சரியான திசையில் செல்கின்றன அல்லது தவறான திசையில் செல்கின்றன என்று சொல்வீர்களா?




*சுகாதார கொள்கி நிறுவனம் கருத்துக்கணிப்பு ஆய்வு (SLOTS)*
*ஜூலை 2024 நடத்தப்பட்ட 680 நேர்காணல்கள் உள்பட, ஏப். 7, 2022-ஜூலை 31,2024 வரை நடத்தப்பட்ட 14,007 மொத்த நேர்காணல்களை அடிப்படையாகக்கொண்டு மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன.*

இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்படும் வேறு எந்தவொரு நாட்டின் மக்களைக்காட்டிலும் இலங்கையர்கள், நாட்டின் போக்கு தவறான திசையில் செல்கிறது என்று நினைப்பது சாத்தியம். 2024 ஜூன்-ஜூலை மாதங்களில், இலங்கையில் 93% உடன் ஒப்பிடும்போது, 29 நாடுகளில் IPSOS நடத்திய வாக்கெடுப்பில் உலகளாவிய சராசரியாக 62% வயது வந்தவர்கள் தங்கள் நாட்டின் போக்கு தவறான திசையில் செல்வதாக நினைத்தனர்.

2024 ஆம் ஆண்டில் நாட்டின் போக்கு செல்லும் திசையைப்பற்றிய பொதுமக்களின் கருத்து வயதைப்பொருத்து சற்று வேறுபடுகிறது. வயதுவந்தவர்களில் வயதுகூடியவர்களுடன் ஒப்பிடுகையில் இளம் வயதுடையவர்கள் (18-29 வயது) மற்றும் 30-44 வயதிற்கு உட்பட்டவர்கள் நாட்டின் போக்கு தவறான திசையில் செல்கிறது என்று நினைக்க அதிக வாய்ப்புள்ளது.

ஜூலை 2024ற்கான மதிப்பீடுகள், 680 நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டவை. வயது, பாலினம், கல்வி நிலை, சமூக பொருளாதார நிலை, இனம், மதம், இருப்பிடம் மற்றும் துறை ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை மக்கள் தொகையுடன் பொருந்துமாறு மதிப்பீடுகள் சரி செய்யப்பட்டன.

## மேலும் விவரங்கள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, August 2024, “Majority of Sri Lankans continue to believe country is moving in the wrong direction”. *Available at:* [https://ihp.lk/research-updates/majority-sri-lankans-continue-believe-country-moving-wrong-direction](https://ihp.lk/research-updates/majority-sri-lankans-continue-believe-country-moving-wrong-direction)

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிப்புகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

SLOTS ஆனது, முழுமையாக நோக்குமிடத்து நாடு செல்லும் போக்கைப்பற்றி பொதுமக்களின் கண்ணோட்டத்தை கருத்துக்கணிப்பு செய்யும் பொருட்டு மக்களிடம் கேட்கும் கேள்வி: "*பொதுவாக, நாட்டில் விஷயங்கள் சரியான திசையில் அல்லது தவறான திசையில் செல்கிறது என்று சொல்வீர்களா?*". பதிலளிப்பவர்கள் பதிலளிக்காமல் இருக்கவோ அல்லது " தெரியவில்லை/உறுதியில்லை" என்று சொல்லவோ அனுமதிக்கப்படுகிறார்கள். நாடு சரியான அல்லது தவறான திசையில் நகர்கிறது என்று கூறும் சதவீதங்கள் நேர்காணல் செய்யப்பட்ட அனைவரையும் அடிப்படையாகக் கொண்டவை, எனவே தெரியாது மற்றும் மறுப்புகளினால் சரியான மற்றும் தவறான தடங்களுக்கான கூட்டுத்தொகை 100% ஆக இருக்காது.

மாதிரி சார்புகளைக் குறைக்க, மதிப்பீடுகள் வயது, பாலினம், துறை, இனக்குழு, மதம், கல்வி, சமூக பொருளாதார நிலை தரவரிசை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றிற்கான தேசிய மக்கள் தொகையுடன் பொருந்தும்விதத்தில் எடையிடப்பட்ட பதிலளிப்பவர்களை அடிப்படையாகக் கொண்டவை. ப்ரொபென்சிட்டி வெயிட்டிங்(propensity weighting) மற்றும் மறுமுறை விகிதாசார பொருத்துதல் (ரேக்கிங்) மூலம் எடை கணிக்கப்படுகிறது.

## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.